அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 24/95

எனது இல. 1/543; ஈ/02டீ/14/94
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
1995 ஜூலை மாதம் 19 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்டமுறையான சபைகளின்
தலைவர்கள் யாவருக்கும்.

**அரச சேவையின், மாகாண அரச சேவையின் அரச கூட்டுத்தாபனச் சேவையின் கனிஷ்ட சேவகர் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்.**

---

30/93 ஆம் இலக்க 1993.12.16 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீது உங்களின் அவதானம் கோரப்படுகிறது.

2. மேற்படி சேவைகளின் கனிஷ்ட சேவகர் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தினை பின்வருமாறு திருத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

3. கனிஷ்ட சேவகர் வெற்றிடங்களை நிரப்பும் போது சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்/நிறுவனங்களின் தலைவர்களால் ஆட்சேர்ப்பு முறை மேலும் செயற்படுத்தப்படும்.

4. இணைந்த அலுவலகப் பணியாளர் சேவைக்குரிய வெற்றிடங்கள் நிரப்புவது தொடர்பில் அமைச்சுக்களின் செயலாளர்கள்/நிறுவனத் தலைவர்கள் இணைந்த சேவைகள் பணிப்பாளரின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அமைச்சுக்களின் செயலாளர்கள்/நிறுவனத் தலைவர்கள் வெற்றிடங்களை நிரப்பும் கருமங்களை செய்வார்கள். அந் நியமனங்களுக்கான முறைசார் நியமனக் கடிதங்கள் இணைந்த சேவைகள் பணிப்பாளரினால் வழங்கப்படுவதுடன் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் அவர்களின் கல்வி மற்றும் பிற தகைமைகள் பற்றிய சான்றிதழ்களை இணைந்த சேவைகள் பணிப்பாளரிடம் சமர்ப்பித்து முறைசார் நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சுக்களின் செயலாளர்கள்/நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. இக் கனிஷ்ட சேவகர் பதவிக்கான ஆகக் குறைந்த தகைமைகள் பின்வருமாறு:

(அ) கல்வித் தகைமைகள் - 8ஆம் வகுப்பு சித்தியெய்தியிருக்க வேண்டும்.

(ஆ) வயது - 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருத்தல் வேண்டும்.

(இ) திணைக்களப் பதவிகளுக்காக விசேட தகைமைகள் தேவைப்படுமிடத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி இக் கல்வித் தகைமைகள் உயர்த்த முடியும்.

6. இப்பதவிகளுக்காக பின்வருமாறு ஆட்சேர்ப்புகள் செய்யப்படும்.

I. சீரமைக்கப்பட்ட ஒரு நேர்முகப் பரீட்சை மூலம்.

II. பதவியின் தன்மையின்படி புள்ளிகள் வழங்கும் முறை தீர்மானிக்கப்படும்.

111. 1992.03.24 ஆந் தேதிய 17/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் அனுமதி வழங்கப்பட்டு பயங்கரவாத விபத்துக்களினால் பாதிப்புற்ற குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சலுகை புள்ளி முறையையும் 1993.12.16 ஆந் தேதிய 30/93 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் அனுமதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் சலுகை புள்ளி முறையும் இந் நேர்முகப் பரீட்சைகளின் போது உபயோகித்தலாகாது.

7. புள்ளிகள் வழங்கப்படும் முறையை விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் பிரகடனப்படுத்த வேண்டும்.

8. 1990.03.09 ஆந் தேதிய 15/90 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள இன விகிதாசாரப்படி இந்த ஆட்சேர்ப்புகள் செய்யப்பட வேண்டும். 1993.12.16 ஆந் தேதிய 30/93 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது.

ஒப்பம்: ஆர்.எஸ்.ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.